> மற்றவர்கள் நம்மை நேசிக்கா விட்டாலும், ஒவ்வொருடனும் கனிவோடும் அன்போடும் வாழ கற்றுக் கொள்வோம்.
>
> - திருத்தநதை பிரான்சில்

சில சமயங்களில் நாம் சந்திக்கும் நண்பர்களும் சரி தெரிந்தவர்களும் சரி, கடவுள் அவர்களை நேசிக்கிறார் என்பதை சந்தேகத்தோடு சொல்வார்கள். அவர்கள் மீது கடவுகளுக்கு அக்கறை இல்லை அல்லது அவர்களின் தேவைகளுக்கு மதிப்பளிப்பதில்லை என்ற எண்ணத்தால், கடவுளின் அன்பு குறித்த சந்தேகங்கள் எழுகின்றன. எடுத்துக்காட்டாக, நோயாளிக்காக செபிக்கும் செபம், பணக் கஷ்டத்திற்காக செபிக்கும் செபம், பதில் கிடைக்காமல் போய்விடுகின்றன. நமது குடும்பத்திற்கு துயரம் மீது துயரம் வரும் போது... “ஏன் எனக்கு?” “என் மீது கடவுளுக்குக் கருணை இல்லையா?” எனக் கேட்கிறோம்.

மனிதன் சிந்திப்பது போல கடவுள் சிந்திப்பதில்லை என இன்றைய வாசகங்கள் கூறுகின்றன. மேலும், மனிதன் நேசிப்பது போல கடவுள் நேசிப்பதில்லை. **கடவுள் அன்பு நிலையானது**, நிபந்தனையற்றது. தமது அன்பை கடவுள் எவ்வாறு வெளிபடுத்துகிறார் என்பது அவரது சித்தத்தையும் ஞானத்தையும் காலத்தையும் பொருத்தது. உலகத்தை மீட்பதற்காக சிலுவை சாவை ஏற்கும் அளவிற்கு நமக்காக தமது ஒரே மகனை அனுப்பியதில், கடவுளின் அன்பின் வெளிப்பாடு சிகரத்தைத் தொடுவதோடு ஆழத்தையும் புலப்படுத்துகிறது. உயர் தியாகத்தை வெளிப்படுத்தும் அன்பிற்கு இதை விட மேலானது உண்டோ?

தந்தையாகிய கடவுள் நம்மை அன்பு செய்வதால், யோவான் எழுதிய முதல் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது போல, இயேசு கிறிஸ்து வழியாக நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகளாக அழைக்கப்படுகிறோம். காரணம் கடவுள் நம்மை அன்பு செய்கிறார். இதனால்தான் திருத்தூதர் பணிகளை எழுதியவர், “இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ், மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்த பெயரும் கொடுக்கப்படவில்லை” என கூறுகிறார். காரணம் கடவுள் நம்மை அன்பு செய்கிறார், இயேசுவே கூறியிருக்கிறார், “நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கிறார்; நானும் தந்தையை அறிந்திருக்கிறேன். அது போல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன்”.

உலகில் “அன்பு” என்ற வார்த்தைக்கு பல்வேறு மனிதர்களில் பல்வேறு அர்த்தங்கள் வரும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், கடவுள் நம்மை அன்பு செய்கிறார்! இல்லையென்றால், நம்மை மீட்பதற்கு இயேசுவை அனுப்பியிருக்க மாட்டார். வாழ்க்கையில் குறைபாடுகள் ஏற்படும் போது கடவுள் நம்மை நேசிக்கிறாரா என எண்ணத் தோன்றும். கடவுள் பார்க்கிறார், கவனிக்கிறார், நமது குறைபாடுகளுக்கு அப்பால், முழுமையான கண்ணோட்டத்தில் அவர் நோக்குகிறார். அவர் நம்மை அன்பு செய்வதால், நாம் நினைப்பதை விட அவரது முகம்(படம்) மிக அழகாக தெரியும். ✝

**வாரம் ஒரு வசனம்**

கடவுள் அன்பு நிலையானது

INTERNAL CIRCULATION ONLY
BUL 16/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

22 ஏப்ரல் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 4ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



Image: ©123rf.com

## கிறிஸ்துவில் மீட்படைந்தோம்

# நேசிக்க

**மினவுதல் மாதா தேவாலயம்**
85A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரூ கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*
**எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்**
*2018 ஏப்பிரல் (சித்திரை) மாதத்தின் கருப்பொருள்:*
**கிறிஸ்துவில் மீட்கப்பட்டோம்**

# மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்
## ( 1848 – 2018 )

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடை பெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** பாஸ்கா 4ஆம் ஞாயிறு **சனி 21-04-2018 ஞாயிறு 29-04-2018**
தி.ப 4: 8-12 தி.பா 117: 1, 8-9, 21-23, 26, 28-29 1 யோவான் 3: 1-2 யோவான் 10: 11-18
**கட்டுவோர் புறக்கணித்த கல்லே மூலைக்கல் ஆயிற்று ! (தி. பா 117)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 21 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. மைக்கேல்) | **மாலை 7.00 மணிக்கு<br>குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 22 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00ம | திருப்பலி (த) (புனித டைட்டஸ், ஏஞ்சலா)<br>திருப்பலி (ஆ) (புனித ஜோன் பொஸ்கோ)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ)<br>மாலை 6.30 கம்.செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ பு**<br>**குமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 23 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 24 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 25 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 26 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 27 | 6.45 கா | திருப்பலி | *மா 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) திரு இருதய ஆண்டவர் சிற்றாலயம் - மார்ஜெரி* |

**பாஸ்கா 5ஆம் ஞாயிறு**
தி.ப 9: 26-31 தி.பா 21: 26b- 27, 28, 30ab, 30c-32 1 யோவான் 3: 18-24 யோவான் 15: 1-8
**ஆண்டவரே நான் செலுத்தும் புகழ் உம்மிடமிருந்து எழுவதாக ! (தி. பா 21)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 28 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித 2ஆம் ஜேன் போல்) | |
| ஞாயிறு | 29 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00ம | திருப்பலி (த) (புனித ஜோன் வியான்னி)<br>திருப்பலி (ஆ) (மறைக்கல்வி படிவம் 3)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை சிறப்பாக வழி நடத்த உதவியவர்களுக்கும் மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**2018 ஏப்பிரல் (சித்திரை) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

**i) ஆலய காணிக்கை:** 14/15 ஏப்பிரல் ரிம:10,976.00

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக.

**ii) இன்று நல்லாயன் ஞாயிறு.** எனவே இன்று இரண்டாவது காணிக்கை சிறப்புக் காணிக்கையாக எடுக்கப்படும்.

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக.

**iii) ஆலயத்திலுனுள் அமைதியைக் கடைப்பிடிப்போம்:** திருப்பலிகளுக்கு இடையில் வாசகங்கள் வாசிக்கும் ஒத்திகை அனுமதிக்கப்படாது. திருப்பலிகளுக்கு மரியாதையான உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- **பங்கின் தொழில் நுட்பக் குழுவில் ஒளி /ஒலி பொறியாளர்களாக உதவி செய்திட அழைக்கிறோம்.** பங்கு அலுவலகம் அல்லது பங்குத் தந்தை அருள்திரு.ஜோர்ஜ் அவர்களை தொடர்புகொள்ளவும். இதுவரை தங்களது உதவியையும் ஆதரவையும் தந்த நேடன் மற்றும் அவர் தம் குழுவினருக்கு நம்முடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்
- **உதவும் கரங்கள்**: ஏப்ரல் 2018 முதல் நம் பங்கில் இலவசமாக கூடுதல் வகுப்புகள் தொடங்க உள்ளன. பாடங்கள்: வரலாறு, (படிவம் 5) கணக்கு (படிவம் 3) இதில் அதிகமான மாணவர்கள் சேர்ந்து பயின்று பயன்பெற அழைக்கிறோம். தொடர்புக்கு: பிரான்சிஸ் ஜேசு (012-2964 336) அல்லது ஹிலரி ஸ்டாமரியா (019-654 7347)
- **குழந்தை இயேசு சபை மடத்திற்கு புதிதாக பொறுப்பேற்றிருக்கும் அருட்சகோதரி ஹென்ரியட்டா** அவர்களை வரவேற்போம். இதுவரை பணி செய்த அருட்சகோதரி ஜோசப்பின் தற்போது செராஸ் கான்வெட்டிற்கு ஓய்வுக்கு செல்கிறார். அவருக்கு நம்முடைய நன்றியையும் தொடர்ந்து நம் செபங்களிலும் அவரை ஒப்புக்கொடுப்போம்.
- **குருத்து அருளடையாளக் கொண்டாட்டம்**: டீக்கன்கள்: சேவியர் எண்ட்ரூ, சைமன் லாவ், மற்றும் டோமினிக் தான். நாள்: மே 1, 2018. இடம் காஜாங் திருக்குடும்ப தேவாலயம். காலை 10.00 மணி
- **நல்லாயன் ஞாயிறு:** இன்னும் அதிகமாக இளஞைர்கள் தேவ அழைத்தலுக்கு மறுமொழி கொடுக்க இன்றைய நாளில் மெழுகுத்திரி ஏற்றி ஒரு பத்து மணி செபமாலையை நம் இல்லங்களில் செபிப்போம்.

- **WOW தண்ணீரில் நடை** மத்தேயு 14:28) "ஆண்டவரே, நீர் தாம் என்றால், நானும் கடல் மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும்"
  27 ஏப்ரல் (வெள்ளி)இரவு 8.00 மணி - ஆலய உணவு விடுதியில் உணவு தயாரித்தல்/வீதியில் இருப்போருக்கு உணவளித்தல்
  28 ஏப்ரல் (சனி) காலை 7.00 மணி - வீட்டில் இருக்கும் நோயாளிகளைச் சந்தித்தல் / ஏழை குடும்பங்களைச் சந்தித்து மகிழ்ச்சி பைகளை அளித்தல்/ மகிழ்ச்சிப் பைகளை நிரப்பிடவும், சூப் கிச்சனுக்கும் நிதி உதவி தேவைப்படுகிறது. உங்களுடைய வற்றாத ஆதரவுக்கு நன்றி. இன்னும் தன்னார்வலர்களும் உதவியாளர்களும் தேவைப்படுகின்றனர்.
  உங்களுடைய பெயர்களை திருப்பலிக்குப் பின் பதிந்துகொள்ளுங்கள்
  தொடர்புக்கு: எட்வின் மூ (012-2059809) கிளென்: 010 2727169
- **பங்கு தூதுரைப் பணிக்காக வருகை தரவிருக்கும் இரட்சகர் சபைக் குருக்களை வரவேற்போம்.** அருள்தந்தையர்கள்: பேட்ரிக் மாசாங(கோலாலம்பூர்) பிரான்சிஸ் விஜயன், யூஜின் லீ (சிங்கப்பூர்) ஜோசப் அப்ரஹாம் மற்றும் ஜோன் போல்(இந்தியா) (ஏப்ரல் 16 முதல் மே 25 வரை) இங்கு தங்கியிருந்து தூதுரைப் பணி செய்ய இருக்கும் அவர்களுக்காக நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்.
- **அதிச வில் இல்லங்களில் திருப்பலி அட்டவணை:**
  i) 23 ஏப்பிரல் (திங்கள்): புனித மரியா(பெர்மாய்) புனித அந்தோணி (டெப்ம்ளர்)
  புனித டெனிஸ்(லாபு) புனித பேட் ரிக் (திமியாங்)
  புனித ஜோசப் குபெர்டினோ(சிகாமட்)
  ii) 24 ஏப்பிரல்(செவ்): புனித நிக்கோலஸ்,புனிதசக்கேயு(திமியாங்) பு. ஹிலாரி 1 (சிகாமட்)
  புனித மேரி (ராசா) புனித ரபேல் (லாபு) புனிதகிரெகொரி (பெர்மாய்)
  iii) 25 ஏப்பிரல்(புதன்):புனித ஜோன்(ராசா) புனித கிறிஸ்டோபர் (ராசா)புனிதரேய்மண்ட்(திமியாங்)
  புனித போல் (ராசா) புனித லியோ(பெர்மாய்)
  iv) 26 ஏப்பிரல்(வியா) புனித ஜோர்ஜ்(ராசா) புனித திரேசா(ராசா) புனித ரோபர்ட் (திவிஜெயா)
  புனித ஸ்டீபன்(திவிஜெயா) புனித ரோஸ்(டெப்ம்ளர்)
  v) 27 ஏப்பிரல்(வெள்) புனித தீமோத்தேயு (திவிஜெயா) புனித சிசிலியா(ராசா ஜெயா) புனித கிளேர் (ராசாஜெயா) புனித பிலிப் (ராசா ஜெயா)
  கூடுதல் விவரங்களுக்கு உங்களுடைய அதிச /சோன் பொறுப்பாளர்களை தொடர்பு கொள்ளவும்.
- **"காபி மேசை " நினைவுப்புத்தகம் மற்றும் வரலாற்று ஒளிவட்டு** ஆகிய தயாரிப்பில் ஈடுபடும் குழுவினர்அனைவரையும் நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்
- **மே மாதம் - செபமாலை மாதம் -** அனைவரின் இல்லத்தில் அதிசக்களில் மற்றும் அதிச க்களில் நடைபெறும் திருப்பலிகளின் போதும் செபமாலை செபிப்போம்.
- **மினவுதல் மாதா திருவிழா - 170 ஆம் ஆண்டு கொண்டாட்டம்: நவநாள்: மே 23 - மே 31 வரை**
- **தேர்தல் மீண்டும் வந்துவிட்டது**: சிறந்த மலேசியாவை உருவாக்க 14 ஆம் பொதுத்தேர்தலுக்காக செபிப்போம்.
  தேர்தல் நாள்: 09-05-2018(புதன்) வாக்காளர்களாக ஏற்கெனவே பதிந்துகொண்டிருந்தால், உங்களுடைய வாக்களிக்கும் மையங்கள் எங்குள்ளது என்று தெரிந்துகொள்ள இந்த அகப்பகத்தை நாடுங்கள். https :pengundi.spr.gov.org
  வாக்கு மையங்களில் உதவி செய்யவும், வாக்குகளை எண்ணுவதற்கும் நபர்கள் தேவைபப்படுகின்றார்கள். விருப்பம் உள்ளோர் திரு. ஷாஃபிக் (018-2801028 / 018-777 2425) அல்லது ஸ்டீவன் (012-6823 777) தொடர்புகொள்ளவும்.
- **சபா சரவாக் மாநில சகோதர சகோதரிகள்** உங்கள் வாக்குகளை செலுத்த அங்கு செல்ல உதவி தேவைப்பட்டால் பங்கு குருவானவரை அணுகவும்.
- **பொதுத் தேர்தலுக்காக செபமாலை** செபித்து, உங்கள் செபங்களை ஒப்புக்கொடுங்கள்.
- **நம்முடைய செபக்குழுவினரின் செபத்தில் இணைந்திடுங்கள்** (திங்கள்) ஆங்கிலம் செவ்வாய் (சீனம்) வியாழன் (தமிழ்)
- **மே 4-5 தேதிகளில் உண்ணா நோன்பும் செபமும்:** (வெள்ளி/சனி) 24 மணி நேர நற்கருணை ஆராதனை பொதுத்தேர்தலை முன்னிட்டு நடைபெறும்.
- **மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான உருவாக்கப் பயிற்சி:** 29-04-2018 (ஞாயிறு) காலை 10.00 – மதியம் 1.00 மணி வரை, ஆலய மண்டபம், அனைத்து தமிழ் மறைக்கல்வி ஆசிரியர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தொடர்புக்கு : சூசை செல்வநாதன் 012 903 6581